රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

ජාතික භාෂා අංශය தேசிய மொழிகள் பிரிவு National Languages Division
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை..
Independence Square, Colombo 07, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது.இல<br>My No. | PS/NLD/ADM/07/SF | ඔබේ අංකය<br>உமது .இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2023.09.04 |

மாவட்ட செயலாளர் ஊடாக
தேசிய ஒருங்கிணைப்பு ஊக்குவிப்பு உதவியாளர்
மாவட்ட செயலாளர் அலுவலகம்
......................................

**<u>குறும் படம் மற்றும் ஆங்கில குறும் தொலைக்காட்சி நாடகப் போட்டிகளின் படைப்புகளை பெறுக்கொள்வதற்கான திகதி நீட்டிப்பு</u>**

மேற்படி விடயம் தொடர்பாக PA/NLD/DRV/04/01/2023, PS/NLD/ADM/07/SF இலக்கமிடப்பட்ட மற்றும் 2023.05.11, 2023.05.22 திகதியிடப்பட்ட கடிதங்களுக்கு அமைவாக,

02. அதன்படி, மேற்படி போட்டி தொடர்பான படைப்புகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 30.09.2023 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பன சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெரியப்படுத்தி, படைப்புகளைப் பெற்று எம்மிடம் அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம்./ அனுராத விஜேகோன்
மேலதிக செயலாளர்(தேசிய மொழிகள்)
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்காக

தொலைபேசி : 011-2676433
தொலை நகல் : 011-2698429
மின்னஞ்சல் : adsecnlg@pubad.gov.lk

දුරකථන 0112696211-13 தொலைபேசி Telephone } 011-2166000 011-3091295 011-2684223
ෆැක්ස් தொலைநகல் Fax } 011-2683132
විද්‍යුත් තැපැල මින්னஞ்சல் E-mail } div-nlg@pubad.gov.lk
වෙබ් අඩවිය இணையத்தளம் Website } www.pubad.gov.lk

## இணைப்பு 01

<u>குறுந்தொலைக்காட்சி நாடகப் போட்டியை நடத்துவதற்கான அளவுகோல்கள்</u>

வயதெல்லை – திறந்தபோட்டி

ஊடகம் - சிங்களம் / தமிழ்

நேரம் - 23 நிமிடங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது

**<u>குறுந்தொலைக்காட்சி நாடகத்தின் சூழமைப்பு</u>**

- இலங்கையானது பல்லின மத, மொழி, கலாசாரங்களைக் கொண்ட நாடாகும். வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களை நோக்கும்போது, மொழி அடிப்படையிலான உள்நாட்டுப் போராட்டங்கள் காரணமாக, உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நாட்டின் வளர்ச்சி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. நாடுகளுக்கிடையிலான நம்பிக்கையும் பரஸ்பர புரிந்துணர்வும் பாதிக்கப்பட்டு, ஒரு தேசமாக உலகத்தின் முன் இலங்கை எழுச்சி பெறுவதற்கு தடையாக உள்ளது. இலங்கையில் அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1978ம் அரசியலமைப்பின் IIIம் அத்தியாயத்தில் மொழியானது அடிப்படை உரிமையாகவும், IVம் அத்தியாயத்தில் மொழி உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மேலும், அரசகரும மொழிக்கொள்கையானது, சிங்களம் மற்றும் தமிழ் அரச கரும மொழிகளாகவும், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகவும் அங்கீகரிப்பதன் மூலம், மொழியானது அனைத்து பிரசைகளின் அடிப்படை உரிமையாகவும் வரைவிலக்கணப்பட்டுத்தப்பட்டுள்ளது. இங்கு மொழிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அரசகரும மொழிக்கொள்கை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால், சமூகத்தில் இன்னும் பல தீர்க்கப்படாத பிரச்சனைகள், முரண்பாடுகள் மற்றும் நெருக்கடிகள் உள்ளன. படைப்பு ரீதியான கலைகளைப் பயன்படுத்தி இலங்கையர் என்ற வகையில் இப்பிரச்சனைகளை வெற்றிகரமாகக் கையாளமுடியும். அதற்கிணங்க, ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு சக்திவாய்ந்த கலை வடிவமாக குறுந்தொலைக்காட்சி நாடகத்தை அறிமுகப்படுத்த முடியும். அதனூடாக, இலங்கையின் அடையாளத்தைப் பாதுகாத்து, பல்வகைமையை பலப்படுத்துவதன் மூலம் சமூகத்திற்கு ஒரு நம்பிக்கையான மற்றும் பயனுள்ள சமுதாயச் செய்தியை உருவாக்க வேண்டும்.

- வெவ்வேறு இனமக்களுடன் குரோதங்களையும், பகைமைகளையும் ஏற்படுத்துவதன் மூலம் இந்தச் சவாலை வெற்றிக்கொள்ள முடியாது என்பதுடன், அதற்காக எளிய, உணர்வு பூர்வமான ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வெற்றி இலக்கை அடைய முடியும் என்பதை உணர்ந்து பயனுள்ள மற்றும் ஆக்கப்பூர்வமான முயற்சிக்கான பாதையைத் ஏற்படுத்துதல் வேண்டும். மேலும், மொழி, தொடர்பாடல், நல்லிணக்கம் தொடர்பாக பெறுமதியான செய்தியை சமூகத்திற்கு வழங்குதல் மற்றும் குறுந்தொலைக்காட்சி நாடகத்தின் முடிவானது மகிழ்ச்சிகரமாக அமையவேண்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன், அதற்கான ஆக்கப்பூர்வமான கருப்பொருள்கள் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன், இவ்வாறான படைப்புகள் மூலம் நல்லதொரு பொருளாதாரச் சூழலை உருவாக்குவதுடன், சமூக வலையமைப்புகள் ஊடாக ஒளிபரப்புவதன் மூலமும் சர்வதேச கவனத்தை ஈர்க்க முடியும்.

**<u>போட்டிக்கு விண்ணப்பித்தல்</u>**

• இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின் மூலம் போட்டிக்கு விண்ணப்பிக்கவும்.

**<u>போட்டி விதிகள் மற்றும் நிபந்தனைகள்</u>**

- போட்டிக்கு, எந்த நாடக பாணியிலும் படைப்புகளை சமர்ப்பிக்கலாம் என்பதுடன் படத்தின் அளவுத்திட்டமானது 1920 X1080 Px (கிடைமட்ட மற்றும் செங்குத்து) இருத்தல் வேண்டும்.
- குறுந்தொலைக்காட்சி நாடகமானது உயர் தரத்தில் காணப்படுதல் வேண்டும் (At least High Definition 4K / 5K ..)
- புகைப்படச் செயற்பாடுகளின்போது குறுந்தொலைக்காட்சி நாடகத்தின் தரத்திற்கு “Water Mark” மூலம் எவ்வித இடையூறுகளும் ஏற்படாத வண்ணம் இருத்தல் வேண்டும்.
- குறுந்தொலைக்காட்சி நாடகம் இயங்கும் நேரம் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்படும்.
- ஆண், பெண், ஏனைய பாலினத்தவர் மற்றும் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்தவப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்பதுடன், எவ்விதமான பின்னணியையும் பயன்படுத்த முடியும்.
- உருவாக்கப்படும் குறுந்தொலைக்காட்சி நாடகங்களின் கருப்பொருள், கதைகள், உரையாடல்கள் போன்றவை எந்தவொரு மக்கள் பிரிவினரை பாதிக்கவோ அல்லது பிற சமூக விரோத நோக்கங்களுக்கு இட்டுச் செல்லவோ கூடாது, அத்தகைய கருத்துக்கள் மறைமுகமாக இருக்கக்கூடாது என்பதுடன் அதுபோன்ற கருத்துக்களை விளக்கவும் கூடாது.
- தாம் சார்ந்த அல்லது பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இனம், மதம், கலாச்சாரம் மற்றும் அரசியல் கருத்துக்கள் காரணமாக எந்தவொரு சமூகக் குழுவிற்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடிய விளக்கக்காட்சிகள் உருவாக்கப்படுவதை தவிர்த்தல் வேண்டும்.

- படைப்புக்களில் எவ்வித தரமற்ற மொழிநடையினையும் பயன்படுத்தக் கூடாது என்பதுடன் மொழிப்பயன்பாட்டில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
- இது ஒரு சுயாதீனமான படைப்பாக இருக்க வேண்டும் என்பதுடன் படைப்பாளர்களால் இதற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட படைப்புக்களின் பிரதி அல்லது மொழிபெயர்ப்புக்களாக இருக்கக்கூடாது என்பதுடன், சுயாதீனமான படைப்பு என தங்களால் உறுதி செய்யப்படுதல் அவசியமாகும்.
- சமூக சூழலுடன் இணைந்து ஆராய்வதன் மூலம், ஒரு சிறந்த, பயனுள்ள கருப்பொருளை உருவாக்கமுடியும். (சம்பந்தப்பட்ட நபர்களுடன் கலந்துரையாடல், புத்தகங்களை வாசித்தல், இணையத்தில் ஆய்வுசெய்தல் போன்றவை)
- போட்டிக்காக மேற்குறிப்பிட்ட பிரமாணங்களின் கீழ் படைப்புக்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் தங்களின் ஆர்வத்தின் அடிப்படையில் இசையமைப்புக்களை மேற்கொள்ள முடியும். அவ்வாறு இல்லாதவிடத்து, சிறந்த பின்னணி இசையமைப்பு என்னும் அங்கம் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.
- படைப்பானது சிங்கள மொழியில் முன்வைக்கப்படுமாயின் தமிழ் மொழிப்பெயர்ப்புடனும், தமிழ் மொழியில் முன்வைக்கப்படுமாயின் சிங்கள மொழிப்பெயர்ப்புடனும் உபதலைப்பிடப்படல் வேண்டும்.
- திரைக்தையானது இருமொழிகளிலும் (சிங்களம் மற்றும் தமிழ்) முன்வைக்கப்படல் வேண்டும்.
- மும்மொழிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் தயாரிக்கப்படும் உரையாடல்களை பயன்படுத்த முடியும்.
- முன்வைக்கப்படும் படைப்பானது சமூகத்திற்கு ஒரு அனுகூலமான செய்தியை வழங்கக்கூடிய உகந்த வடிவமைப்பாக இருக்கவேண்டும்.
- குறுந்தொலைக்காட்சி நாடகத்தின் உள்ளடக்கம் மற்றும் தொழில்நுட்பத்தன்மை குறித்து விசேட கவனம் செலுத்தப்படுவதால், அவ்வாறில்லாத படைப்புக்களானது நடுவர் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடுவர் குழுவின் தீர்மானது இறுதித் தீர்மானமாக உள்ளதால், அது தொடர்பாக எவ்வித செல்வாக்கினையும் செலுத்த முடியாது.

<u>**பொதுவான தகவல்கள்**</u>

- அமைச்சின் தேசியமொழிகள் பிரிவினால் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள YouTube தளத்தில் காணொளிகள் பதிவேற்றம் செய்யப்படுவதால், குறுந்தொலைக்காட்சி நாடகங்கள் சிறப்பான நிலையில் இருப்பது அவசியம் என்பதுடன், அவ்வுருவாக்கம் அமைச்சிற்கு முன்வைக்கப்பட்ட பின்னர், அப்படைப்புகளுக்கான முழு உரிமையும் பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு உரியதாகும்.

**<u>படைப்பினைச் சமர்ப்பிக்க வேண்டியமுறை</u>**

1. வடிவமைக்கப்பட்ட குறுந்தொலைக்காட்சி நாடகத்தை DVD தட்டொன்றுடன், நாடக பிரதி மற்றும் விண்ணப்பத்துடன் கீழே உள்ள முகவரிக்கு அனுப்பவேண்டும்.

> மேலதிக செயலாளர் (அரச சேவைகள், மறுசீரமைப்பு மற்றும் தேசியமொழிகள்)
> பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும்
> உள்ளூராட்சி அமைச்சு
> தேசிய மொழிகள் பிரிவு
> சுதந்திர சதுக்கம்
> கொழும்பு 07.

2. படைப்பானது தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் தயாரிக்கப்படும் குறுந்தொலைக்காட்சி நாடகத்திற்குரிய சுவரொட்டியை எமக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் அத்தோடு, அவ்வாக்கம் விருது வழங்கும் விழாவில் பார்வையாளர்களுக்காக காட்சிப்படுத்தப்படும்.

3. இறுதி திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் படைப்புக்கள் நிராகரிக்கப்படும்.

**<u>விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்</u>**

- முன்வைக்கப்படும் அனைத்து குறுந்தொலைக்காட்சி நாடகங்களும் நிபுணத்துவம் பெற்ற நடுவர் குழுவினால்,

    - சிறந்த நாடகம்
    - சிறந்த நடிகர், சிறந்த நடிகை
    - சிறந்த துணை நடிகர் மற்றும் நடிகை
    - சிறந்த திரைக்கதை
    - சிறந்த அங்க வசனங்கள்
    - சிறந்த படக்கட்டுரை
    - சிறந்த பட வசனங்கள்
    - சிறந்த ஒளிப்பதிவு
    - சிறந்த ஒளிப்பதிவாளர்
    - சிறந்த இயக்குனர்
    - சிறந்த பின்னணி இசை இயக்கம்

ஆகிய அங்கங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்டு, அமைச்சினால் பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

# <u>குறும் தொலைக்காட்சி நாடகப் போட்டிக்கான விண்ணப்படிவம்</u>

முழுப்பெயர் :-

விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கம் :-

பிறந்த திகதி :-

மின்னஞ்சல் முகவரி :-

மாவட்டம் :-

பிரதேச செயலகர் பிரிவு :-

கிராம சேவகர் பிரிவு :-

தொலைக்காட்சி நாடகத்தின் தலைப்பு :-

மொழி மூலம் :-

நாடகத்தின் சுருக்கம் :-

இயங்கும் காலம் :-

நடிகர்களின் பங்களிப்பு (பிரதான வரிசையில் இருந்து இறுதி வரை)

| தொடர் இல | பாத்திரம் | நடிகர்/கலைஞரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) | விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |
| 11. | | | |
| 12. | | | |

| தொடர் இல | துணைக் கூறுகள் | பெயர் (முதலெழுத்துக்களுடன்) | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 1. | திரைக்கதை | | |
| 2. | இயக்கம் | | |
| 3. | தொகுப்பு | | |
| 4. | உடை வடிவமைப்பு | | |
| 5. | படப்பிடிப்பு | | |
| 6. | பட வடிவமைப்பு | | |
| 7. | இசை இயக்கம் | | |

இப்படைப்பானது பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தேசிய மொழிகள் பிரிவின் ஊடாக நாடாத்தப்படும் குறும் தொலைக்காட்சி நாடகப்போட்டிக்காக என்னால் தயாரிக்கப்பட்ட சுய படைப்பாகும், மேலும் இப்படைப்பு போட்டி விதிமுறைகளுக்கமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, இப்படைப்பானது இதற்கு முன்பு எந்த போட்டிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டோ அல்லது திரையிடப்பட்டதோ இல்லை, இப்படைப்பினைச் சமர்ப்பித்த பின்பு மொழியினை மேம்படுத்தும் நோக்கத்திற்காகவும் வேறு எந்த நோக்கத்திற்காகவும் இப்படைப்பினைப் பயன்படுத்த இவ் அமைச்சிற்கு பூரண அதிகாரம் உள்ளது, அதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்பதுடன் மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மை மற்றும் சரியானவை என்று உறுதியளிக்கின்றேன்.

.....................                                        .........................................

திகதி                                        படைப்பாளரின் கையொப்பம்

## <u>ஆங்கிலத்தில் குறும் திரைப்படப் போட்டி நடாத்துவதற்கான விதிமுறைகள்</u>

வயதெல்லை – திறந்த போட்டி

குறும் திரைப்படத்தின் நேரம் - குறைந்தபட்சம் 3 நிமிடங்களுக்கு குறையாமலும் அதிகபட்சமாக 15 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பங்கேற்பவர்களின் எண்ணிக்கை – வரையறுக்கப்படாதது

ஒளிப்பதிவு முறைமை – கையடக்க தொலைபேசி

**<u>குறும் திரைப்படப் போட்டி தொடர்பான சூழமைப்பு</u>**

- ஒரு மொழியின் உயிர்த்தன்மை என்பது அது பயன்பாட்டில் இருக்கும்வரை மட்டுமே நிலைத்திருக்கும். வாழும் மொழிகள் எப்போதும் விருத்தி செய்யப்பட வேண்டிய அதே நேரம் அது புதிப்பிக்கப்பட வேண்டும். சரியான மொழிப்பாவனை பொதுமக்களின் நல்லிணக்கம் மற்றும் கல்விநிலை என்பவற்றை வெளிக்காட்டும். உயிர் வாழும் மொழியொன்று விருத்தியடையும் போது சர்வதேச மொழிகளின் செல்வாக்கு மற்றும் கண்காணிப்பு என்பன அவசியமாகின்றது. உலக மொழி என்று கருதப்படும் ஆங்கில மொழியின் சொற்கள் மொழி வகைப்பாட்டுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழி தற்போது முக்கிய மொழியாகக் கருதப்படுகின்ற அதே வேளை நவீன உலகில் இம்மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. சர்வதேசத்தை வெற்றி கொள்ள இம்மொழியில் பாண்டித்தியம் பெறுதல் வேண்டும். எனவே பொருளாதார வெற்றியினைப் பெறும்பொருட்டு தரமிக்க படைப்புக்களை உருவாக்குவதற்கு ஆங்கில மொழி ஒரு அடிப்படையாகக் காணப்படுகின்றது. மொழியினை அறிந்து கொள்வதன் மூலம் பலருக்குமிடையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை அன்னியோன்ய நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை விருத்தி செய்யமுடியும். அவ்வாறே இந்த படைப்பின்மூலம் பால்நிலை வேறுபாடு தொடர்பான பகுப்பாய்வினையும் மேம்படுத்த முடியும். இந்த சூழமைப்பின் மூலம் உங்கள் படைப்பினை முன்வைக்கக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை அதற்கு பொருத்தமான தலைப்பும் அமைதல் வேண்டும்.

## போட்டி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

- போட்டிக்கு எந்த வடிவத்திலும் வடிவமைப்புக்களினை சமர்ப்பிக்கமுடியும் படத்தின் அளவுத்திட்டமானது PX **1920x1080** (கிடைமட்ட மற்றும் செங்குத்து) அளவுத்திட்டத்தில் இருக்கவேண்டும்.
- படப்பிடிப்பின்போது குறும் திரைப்படத்தின் தரமானது மாறுபடும் வகையில் Water Mark ஊடாக மற்றங்களினைச் செய்தலாகாது.
- குறும் திரைப்படம் ஓடும் நேரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- இந்த அமைச்சின் ஊடாக சமூகத்திற்கு வழங்கப்படும் செய்தியானது பார்வையாளர்களிடையே நல்லுறவினை வளர்ப்பதற்கேற்ற சிறந்த படைப்பாகக் காணப்படவேண்டும்.
- ஆண், பெண், ஏனைய பாலினத்தவர் மற்றும் அனைத்து இனங்களினையும் குறிக்கும் வகையிலான வடிவமைப்புக்கள் இடம்பெறுதல் வேண்டும்.
- கதையின் சூழலானது அரசியல் கருத்துக்கள் இல்லாததாகவும், எந்தவொரு மக்களுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய அச்சுறுத்தும் கருத்துக்கள் மற்றும் பாகுபாடுகள் இல்லததாகவும் இருத்தல் வேண்டும்.
- கதையின் பின்னணியின் அடையாளத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகின்ற அதேவேளை கற்பனை வடிவமானது சிறப்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
- படைப்பில் பிரவேசிக்கும் விதம், கதையின் சூழலினை முன்னெடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும் உத்திகள் மற்றும் படைப்பின் வேக வளர்ச்சியை ஊக்குவிக்கப் பயன்படுத்தப்படும் உத்திகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகிறது.
- திரைப்படத்திற்குப் பயன்படுத்தப்படும் பின்னணி இசையானது படத்தின் வசனங்களின் தரத்துக்கு இடையூராக இருக்கக்கூடாது.
- காணொளியின் தரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- படைப்புக்குப் பயன்படுத்தப்படும் மொழி ஊடகமானது இரசனைக்கு இடையூரில்லாத தரமான மொழி அமைப்பில் காணப்படவேண்டும்.
- இது உங்கள் சொந்த படைப்பாகக் காணப்படவேண்டும், மேலும் இந்நாட்டு மற்றும் வெளிநாட்டு படைப்பாளர்களினால் செய்யப்பட்ட படைப்பாகவோ அல்லது மொழிபெயர்ப்பாகவோ இருக்கக்கூடாது.
- படைப்பானது ஆங்கில மொழி மூலம் வழங்கப்படவேண்டும் என்பதுடன் சிங்கள மற்றும் தமிழ் உப தலைப்புகளுடன் ஆக்கப்படவேண்டும்.
- திரைக்கதை ஆங்கில மொழியில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**பொதுவான தகவல்கள்**

- சகல படைப்புக்களும் **MP4** காணொளி வடிவில் **DVD** இல் பதிவு செய்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- தேசிய மொழிகள் பிரிவினால் தொடக்கப்படவுள்ள **You Tube** தளத்தில் காணொளிகள் பதிவேற்றப்படவுள்ளதால் இப்படைப்பின் தரம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- இப்படைப்பானது தேசிய மொழிகள் பிரிவுக்கு அனுப்பப்பட்ட பின்னர் மொழி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இதனைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கவேண்டும்.

**படைப்பினை சமர்ப்பிக்கவேண்டிய முறை**

- ஆங்கில மொழியில் உருவாக்கப்பட்ட குறும் திரைப்படத்தினை தொகுப்புச் செய்து DVD இல் பதிவு செய்து அதன் பிரதி, நடிகர்கள் பட்டியல் மற்றும் பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் மற்றும் கையொப்பத்துடன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக செயலாளர் (அரச சேவைகள், மறுசீரமைப்பு மற்றும் தேசிய மொழிகள்)
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
தேசிய மொழிகள் பிரிவு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு-07

- படைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டு தங்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் ஆங்கில குறும் திரைப்படம் பற்றிய தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகளினை எங்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்பதுடன் இது பரிசளிப்பு விழாவில் காட்சிப்படுத்தப்படும்.
- கொடுக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் படைப்புக்கள் மற்றும் மொழிபெயர்ப்புக்கள் அல்லது மாற்றியமைக்கப்பட்ட படைப்புக்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

# <u>ஆங்கில குறும் திரைப்படப்போட்டிக்கான விண்ணப்படிவம்</u>

| | |
|---|---|
| முழுப்பெயர் | :- |
| விலாசம் மற்றும் தொலைபேசி இலக்கம் | :- |
| பிறந்த திகதி | :- |
| மின்னஞ்சல் முகவரி | :- |
| மாவட்டம் | :- |
| பிரதேச செயலகர் பிரிவு | :- |
| கிராம சேவகர் பிரிவு | :- |
| படைப்பின் விபரங்கள் | :- |
| படைப்பின் தலைப்பு | :- |
| படைப்பின் சுருக்கம் | :- |
| ஓடும் நேரம் | :- |

இப்படைப்பானது பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தேசிய மொழிகள் பிரிவின் ஊடாக நாடாத்தப்படும் குறும் திரைப்படப்போட்டிக்காக என்னால் தயாரிக்கப்பட்ட சுய படைப்பாகும், மேலும் இப்படைப்பு போட்டி விதிமுறைகளுக்கமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, இப்படைப்பானது இதற்கு முன்பு எந்த போட்டிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டோ அல்லது திரையிடப்பட்டதோ இல்லை, இப்படைப்பினைச் சமர்ப்பித்த பின்பு மொழியினை மேம்படுத்தும் நோக்கத்திற்காகவும் வேறு எந்த நோக்கத்திற்காகவும் இப்படைப்பினைப் பயன்படுத்த இவ் அமைச்சிற்கு பூரண அதிகாரம் உள்ளது, அதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்பதுடன் மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மை மற்றும் சரியானவை என்று உறுதியளிக்கின்றேன்.

| | |
|---|---|
| ..................... | ......................................... |
| திகதி | படைப்பாளரின் கையொப்பம் |

பிரதேச செயலாளரின் சிபார்சு மற்றும் கையொப்பம் :-